Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 179

யாழ்ப்பாணம் ஆடி 26 ஐ! ஆகீ 19 புதன்கிழமை (11-8-71)

லாலா சோப்
ஸ்தாபனத்தார் அளிக்கும்
கரபந்தாட்டப் போட்டி

மேற்படி ஸ்தாபனத்தார் வடமாகாண விளையாட்டுக் கழகங்களிடையே கரபந்தாட்டப் போட்டியை நடத்தவிருக்கிறார்கள்.

20-8-71க்கு முன்னர் தொடர்பு கொள்க

விபரங்களுக்கு:
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

11 AUG 1971 UNDERGRADUATE LIBRARY

# பொலிசாருக்கு கொரில்லா யுத்த முறைப் பயிற்சி!

## தியத்தலாவை ராணுவ முகாமில் நடக்கிறது

கொழும்பு;புதன்

பொலிசாருக்கு கொரில்லா யுத்தப்பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் துரிதமாக மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னோடியாக தேர்ந்தெடுக்கப்பட்ட 20 பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்தப் பயிற்சி தற்போது அளிக்கப்பட்டு வருகிறது.

தியத்தலாவையிலுள்ள இராணுவ முகாமில் கொரில்லா யுத்தப் பயிற்சி தற்போது நடைபெறுகிறது. இதுவரைகாலமும் இந்த யுத்தமுறை இராணுவத்தினருக்கு மட்டுமே இலங்கையில் பயிற்றப்பட்டு வந்தது.

நாடுபூராவுமுள்ள சகல பொலிசாருக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படும் என்றும் இப்போது பயிற்சி பெற்றுவரும் 20 பொலிஸ் அதிகாரிகள் ஏனைய பொலிசாருக்கும் இந்தப் பயிற்சியை அளிப்பார்களென்றும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவர் இன்று தெரிவித்தார்.

## ராணுவ நீதிமன்றத்துக்கு முஜிபுர் எதிர்ப்பு?

புதுடில்லி, ஆகஸ்ட் 10

தம்மை விசாரிப்பதற்கு ராணுவ நீதிமன்றத்துக்கு எதுவிதத் தகுதியும் கிடையாது என்று கிழக்குவங்க அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் கூறியிருக்கிறார்.

ராணுவ நீதிமன்றம் தம்மை விசாரிக்க தகுதியில்லை என்றும், இந்த விசாரணை இரகசியமாக நடப்பதையும் தாம் எதிர்ப்பதாகவும் ஷேக் முஜிபுர்ரஹ்மான் கூறியிருக்கிறார்.

ஷேக் முஜிபுர்ரஹ்மான் மீதான விசாரணைகள் நாளையதினம் ராணுவ நீதிமன்றம் ஒன்றினால் நடத்தப்படவிருக்கின்றன. இந்த விசாரணைகளில் தம் சார்பில் வழக்காறிஞர் எவரும் ஆஜராவதை ஷேக் நிராக

6-ம் பக்கம் பார்க்க

## ஞாயிறு மசோதா இன்று நிறைவேறும்?

கோட்டை, புதன்

ஞாயிற்றுக்கிழமையை வாரவிடுமுறையாக்கும் மசோதா மீதான ஒத்திவைக்கப்பட்ட பிரேரணை மீது இன்று செனட் சபையில் தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. மிகத் துணிகரமான முறையில் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்கு முன்வந்த பிரதமரைப் பாராட்ட வேண்டும் என்றும் இம் மசோதாவை ஆதரிப்பதென ஐ. தே. கட்சி தீர்மானித்திருக்கிறது என்றும் செனட்டர் டி. பி. ரணசிங்கா பேசுகையில் கூறினார்.

இம் மசோதா சமர்ப்பித்த நாளிலிருந்து தமது கட்சி ஆதரவு கொடுத்து வந்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு விஜயமானே பேசுகையில் குறிப்பிட்டார்.

7-வது தினமாக இன்று இந்த விவாதம் நடைபெற்றது. நாளை 11ம் திகதி இம் மசோதா நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

......

### டாக்டர் 'நாகா' ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் நல்லூர்த் தொகுதியின் முன்னாள் பிரதிநிதியுமான டாக்டர் இ. மு. வி. நாகநாதன் கடும் சுகவீனமுற்றுள்ளார்.

மண்டையில் இரத்தநாளம் வெடித்து உடலின் ஒரு பக்கம் இயங்கும் சக்தியை இழந்துவிட்டதாகவும் சுயநினைவை அவர் இழந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள டாக்டர் நாகநாதனைத் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்ற உறுப்பினர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நேற்றுச் சென்று பார்வையிட்டனர். லண்டனிலிருக்கும் அவரது மகள் இன்று கொழும்பு வந்து சேருவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி டாக்டர் நாகநாதனின் உடல்நிலையில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பச்சிளம் குழந்தைகளை கிணற்றுள் வீசிய தாய்

### தற்கொலை முயற்சிதோல்வி குழந்தைகள் மாண்டன

முல்லைத்தீவு, செவ்.

இரண்டரை வயதுப் பெண் குழந்தையையும் ஒன்பதுமாத ஆண்குழந்தையையும் கிணற்றுக்குள் வீசிவிட்டுத்தானும் விழுந்து தற்கொலை செய்ய முயன்ற ஒரு தாயார் அயலவர்களால் காப்பாற்றப்பட்டார். ஆனால் அந்த இரு பச்சிளம் குழந்தைகளும் மாண்டபரிதாப சம்பவம் முள்ளியவளையில் நடந்துள்ளது!

இரண்டரை வயது ஜெயமணியும் ஒன்பதுமாத ஜெயநேசனுமே பரிதாபமாக மாண்ட குழந்தைகளாவர். உயிர்தப்பிய பொன்மணியும் அவரது கணவர் இரத்தினமும் இப்போது றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இருகுழந்தைகளின் மரணம் பற்றியும் முல்லைத்தீவு நீதவான் ஸ்தலத்தில் விசாரணை நடத்தினார். விசாரணையின் பின் கணவனையும் மனைவியையும் இம்மாதம் 13-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

குழந்தைகளின் மரண விசாரணையின்போது பொன்மணியின் தந்தை அளித்த சாட்சியத்திலிருந்து பின்வரும் தகவல்கள் வெளிவந்தன:

பொன்மணிக்கும் அவரது புருஷன் இரத்தினத்துக்குமிடையில் அடிக்கடி தகராறு இருந்து வந்திருக்கிறது. சென்ற ஆறாந் திகதி இரத்தினம் பொன்மணியை அடித்துத் துரத்திவிட்டார். ஒட்டுசுட்டான் காட்டுப் பகுதிக்குள் மறுநாள் காலை பொன்மணியையும் குழந்தைகளையும் கண்ட பொன்மணியின் தமையன் சண்முகம் மூவரையும் தகப்பனிடம் சேர்ப்பித்தார். எட்டாந்திகதி வீட்டுக்கு வந்த இரத்தினம் மன்னிப்புக் கோரி மனைவியையும் குழந்தைகளையும் தனது வீட்டுக்குக் கூட்டிச் சென்றார்.

ஒன்பதாம் திகதி காலையில் இச்சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. பொன்மணி தனது கணவருக்கு எழுதி வைத்ததாகக் கூறப்படும் கடிதமொன்றும் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சம்பவம் சம்பந்தமாக முல்லைத்தீவுப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. ஜி. வடிவேலு தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகிறார்.

## மேன்முறையீட்டு நீதிமன்ற மசோதா நிறைவேறியது

கோட்டை, புதன்

இலங்கையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கும் லண்டன் பிரிவிக் கவுன்சிலுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமையை அகற்றுவதற்குமான மசோதா இன்று ஆட்சிமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

மசோதாவை ஆதரித்து 115 பேரும், எதிர்த்து 9 பேரும் வாக்களித்தனர். தமிழரசுக்கட்சி மசோதாவை ஆதரித்தும், ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்தும் வாக்களித்தன.

இம்மசோதா மீது அரசியல் நிர்ணயசபை அமைச்சர் பேசுகையில், இலங்கையிலுள்ள செனட் சபையும், ஏகாதிபத்திய வாதிகளின் செனட்டும் (பிரிவிக்கவுன்சில்) சேர்ந்து புதிய அரசியல் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடுவதை முறியடிக்கவே இம்மசோதா கொண்டுவரப்பட்டது என்பதைப் பகிரங்கமாகவே சொல்லத் தாம் தயங்கவில்லை என்றார்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில், புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் பிரிவிக்கவுன்சிலுக்கு அப்பீல்செய்யும் உரிமை ரத்தாகிறது. அப்படியிருந்தும் மூன்று மாதத்திற்குள் இதை அவசரம் அவசரமாக ஏன் கொண்டுவரவேண்டும்? இதனாலேயே இதை நாம் எதிர்க்கிறோம் என்றார்.

உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் பேசுகையில் மூன்றுமாதத்தின் பின் இது சட்டமாகும் என்றால் இப்பொழுதே இதைக் கொண்டு வந்தால் என்ன? என்றார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு சி. எக்ஸ். மார்டினும் மசோதாவை ஆதரித்துப் பேசினார்.

யாழ். உதைபந்தாட்டச் சங்க

# 'நொக்கவுட்' போட்டி 21-ம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தினால் வருடாவருடம் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்தப்படும் "நொக்கவுட்" உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கின்றது.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்டங்களிலிருந்து மொத்தம் 15 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொள்கின்றன.

முதல் போட்டியாக யாழ்ப்பாணம் "வைக்கிங்ஸ்" கழகமும் தெல்லிப்பளை "கிறஸ் கொம்பஸ்" கழகமும் மோதிக் கொள்ளும்.

22-ம் திகதி முதல் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் "இறீன்பீல்ட்" கழகமும் குருநகர் "புனிதவளன்" கழகமும்; 2-வது ஆட்டத்தில் நாவாந்துறை "சென். மேரீஸ் கழகமும் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழகமும் மோதுகின்றன.

"வல்வெட்டித்துறை புளூஸ்" கழகமும் குருநகர் "பாடுமீன்" கழகமும்; நாவாந்துறை "சென். நீக்கிலஸ்" கழகமும் "அரியாலை யுனைட்டட்" கழகமும்; குருநகர் "யுத்தவுக்ஸின்" கழகமும் வதிரி "பொம்மஸ்" கழகமும் மோதிக் கொள்ளும் திகதிகள் பின்னர் குறிப்பிடப்படும். "பொலிஸ்" கோஷ்டியும், "சம்சுன்" கழகமும் "பைய்ஸ்" நிலையில் உள்ளன.

கடைசித் தடவையாக நடைபெற்ற "நொக்கவுட்" போட்டியில் குருநகர் "புனிதவளன்" கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இம்முறை நடைபெறும் "நொக்கவுட்" போட்டிகள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும்.

(தே நி)

## டெஸ்ட் கிரிக்கெட்: சம முடிவு

லண்டன், ஆகஸ்ட் 10

மான்செஸ்டரில் இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. கடும் மழை காரணமாக 5வது நாளான இன்று ஆட்டம் நடைபெறாததால் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டது. ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து: முதல் இன்னிங்ஸ் 386 ஓட்டங்கள். இரண்டாம் இன்னிங்ஸ் 3 விக்கெட் நஷ்டத்திற்கு 245 ஓட்டங்கள். இந்தியா: முதல் இன்னிங்ஸ்: 212 ஓட்டங்கள். 2ம் இன்னிங்ஸ் 3 விக்கெட்டுகளுக்கு 65 ஓட்டங்கள்.

முதலாவது டெஸ்டும் மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும் சில வெற்றுப்பெட்டிகளும், வேறு பல பொருட்களும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கு இருக்கின்றன.

முற்பணம் ரூபா 50/- சங்கத்தின் அலுவலகத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைப்பெற்று 17-8 71 மாலை 4-30 மணிக்கு முன் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

17-8-71 மாலை 4 30 மணிக்குப்பின் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இங்ஙனம்
கூட்டுறவுச்சேவையிலுள்ள
க. இரமச்சந்திரன்
காரியதரிசி
2953

## ஏலவிற்பனை விளம்பரம்

நகரசபை,
பருத்தித்துறை.

பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான கழிக்கப்பட்ட எரிந்த செப்புக் கம்பிகள், உழவு யந்திரப்பெட்டி, தட்டச்சு யந்திரம், மோட்டார் வண்டி உதிரிப்பாகங்கள், வெற்றுத்தார் தகரங்கள் உட்படப் பல பொருட்கள் 23-8-71-ம் திகதி முற்பகல் 10 மணியளவில் சபைக் காரியாலயத்தில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். பொருட்களை வாங்கியவர்கள் உடனே பணத்தைக் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

வ. தர்மலிங்கம்,
தலைவர்,
நகரசபை,
பருத்தித்துறை

நகரசபைக் காரியாலயம்,
பருத்தித்துறை,
9-8-71. 2954

வட்டு. தேர்தல் வழக்கு

## அப்பீல் விசாரணை

கோட்டை, செவ்.

வட்டுக்கோட்டைத் தொகுதித் தேர்தல் ஆட்சேப அப்பீல் மனுமீதான விசாரணை அடுத்தமாதம் 8-ம் திகதி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவிருக்கிறது.

## நல்லையில் இன்று

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருப்புகழ் மண்டப இசையரங்கில் செல்வி குணபூஷணி நாகலிங்கம் பக்திப்பாடல் பாடுகின்றார். இரவு 9-30மணிக்கு நடைபெறும் திருவிளையாடல் விரிவுரையில் "இரசவாதம் செய்த திருவிளையாடல்" பற்றி ஸ்ரீலஸ்ரீ தம்பிரான் சுவாமிகளால் விரிவுரையாற்றப்படவுள்ளது.

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

### விற்பனைக்கு

சக்தி பூஜா ஆர் பத்திகள்: ஈழநாட்டில் ஈடு இணையற்ற சிறந்த, நீண்ட நேரம் எரியும் தெய்வீக நறுமணம் கொண்ட பத்திகள். என். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை, கொழும்பு - யாழ்ப்பாணம். 3410

அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட, நூல் வாங்குவதற்கு பெர்மிற் உள்ள ஆறு தறிகள் சைப்பிளேருடன், Japanese AIWA Tape Recorder (Main, Torch Battery & Battery) விற்பனைக்குண்டு. 68, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 3458

### தேவை

அனுபவம் உள்ள லேத் இயக்குனர் (Lathe Operater) தேவை. நேரில் வரவும். சேவி இனாஸ் வேக்ஸ், கோப்பாய். 3459

### கல்வி

யாழ். நுண்கலை தொழில் பாடசாலை 426, K. K. S. றோட் யாழ்ப்பாணம் மோட்டார் இயந்திரவியல் "டிப்ளோமா (Diploma) ஒருவருடம் மோட்டார்கார்கள், ஸ்கூட்டர், டீசல் எஞ்சின், வாட்டர் பம்புகளின் செய்முறையிலும், படிமுறையிலும் விசேஷ பயிற்சி அளிக்கப்படும். சிங்களமும் கற்பிக்கப்படும். தையல் வேலை "டிப்ளோமா" (Diploma) மெசின் ஒரு வருடம். சகல விபரங்களுக்கும் காரியாலயத்தில் நேரடியாகவோ அல்லது பத்து சதமுத்திரையும் விலாசமுடைய தபாலுறையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 1-9-71க்கு முன் அனுப்பவும். கௌரவ தலைவர் சிவ. உ. சோமசேகரம், கௌரவ காரியதரிசி சி. இ. சபாலிங்கம். 3456

## மார்ட்டின் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்றப் பிரதிநிதி திரு. வி. எஸ். மார்ட்டின் இன்று நண்பகல் யாழ்ப்பாணம் வருகிறார். அரசியல் நிர்ணயசபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வது சம்பந்தமாக ஏற்பட்டுள்ள கருத்துவேறுபாடுகளைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட பின் இன்று தான் திரு. மார்ட்டின் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வருகிறார்.

இன்று நண்பகல் பலாலி விமானநிலையம் வந்துசேரும் திரு. மார்ட்டினை உற்சாகமாக வரவேற்பதற்கு அவரது ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

## தோல்வி

மட்டக்களப்பு, செவ்,

மட்டக்களப்பு நகர மேயர் பதவியிலிருந்து திரு க தியாகராஜாவையும் உதவி மேயர் பதவியிலிருந்து திரு. எம். ஆர். ராசலிங்கையும் நீக்குவதற்கென மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் இன்று தோல்வியடைந்தன.


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
பிற்பகல் 4-30க்கு மட்டும்
TO TRAP A SPY (சண்டைப்படம்)

3-வது வெற்றி வாரம்
தினசரி: மாலை 6-30, இரவு 9.45
★ ஏ. பி. நாகராஜன் ★ வரலக்ஷ்மி
நடித்த
ஏழுபிள்ளை நல்லதங்காள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
பேபி ராணி
சுந்தரராஜன்—பத்மினி
நடித்த
குழந்தைக்காக

இந்தியாவில் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்பெளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.
லிடோ யாழ்நகர்
தினசரி காலை10-30, பி ப 2-30, மாலை6-30, இரவு10-00



சாதனா
சஞ்சே
பால்ராஜ்ஸானி
சப்னம்
நடித்த
ஏக் பூல் தோமாலி
( ஹிந்தி )
( ஈஸ்ட்மன் கலர் )

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி மூன்று காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
★ சிவாஜி ★ வாணிஸ்ரீ
★ முத்துராமன் ★ சோ
நடித்த முழுநீள ஹாஸ்யச் சித்திரம்
நிறைகுடம்
திரைக்கதை - வசனம் சோ

MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p.m.
Jack Lemmon
Sandy Dennis
in
THE OUT OF TOWNERS
(Color)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப. 6-30, 10-00
முக்காமாலா - அஞ்சலிதேவி
நடித்த
நிரபராதி

வெல்லி சினிமா
நானிப்பாய்
பி ப 2-30, 6-30 10-00
ரவிச்சந்திரன் இரு வேடங்களில்
ஜெயலலிதா-நாகேஷ்
நடித்த
பணக்காரப்பிள்ளை

REGAL - Jaffna
Daily 5-15&7-15 p m.
Robert Redford
Katherine Ross
in
"TELL THEM WILLIE BOY IS HERE"

றீகல் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-00 இரவு 9-45
ஆனந்தன் - கே. ஆர். விஜயா
நாகேஷ்-ராஜஸ்ரீ
நடித்த
தாயின் மேல் ஆணை

ராணி (யாழ்ப்பாணம்)
பி.ப. 2-30 இரவு, 6-30, 10-00
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
நடித்த
கஸ்தூரி திலகம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலக்ஷ்மி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
தலைவன்

பாரத-சோவியத் பாதுகாப்பு ஒப்பந்தம்:

# இந்திய தலைவர்கள் வரவேற்பு பாக். வட்டாரங்களில் அதிர்ச்சி!

## பிரிட்டனும் இதைப் பின்பற்ற வேண்டும் என்கிறார் ராஜாஜி

புதுடில்லி, ஆகஸ்ட் 0

**இந்தியாவும் சோவியத் யூனியனும் செய்துகொண்ட பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு இந்திய அரசாங்க தலைவர்களும் சுதந்திராக் கட்சி உட்பட பல்வேறு எதிர்க்கட்சித் தலைவர்களும் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்:**

**இவ்வொப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக பாகிஸ்தானில் அதிர்ச்சி நிலவுவதாகச் செய்திகள் கூறுகின்றன**

இந்திய-சோவியத் வெளியுறவு அமைச்சர்கள் நேற்று செய்துகொண்ட பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு இந்திய ஆட்சிமன்றம் தனது பெரும் ஆதரவைத் தெரிவித்துக்கொண்டுள்ளது. சுதந்திராக்கட்சித் தலைவர் திரு. ராஜாஜி இந்த ஒப்பந்தத்தை வரவேற்றிருப்பதோடு இதேபோன்ற ஒப்பந்தமொன்றை பிரிட்டனும் செய்துகொள்ளுமெனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண், இவ்வொப்பந்தம் இந்திய உபகண்டத்தில் அமைதி ஏற்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதாக இருக்கிறதென்று தெரிவித்தார்.

ஏகாதிபத்தியத்தை இந்திய உபகண்டத்திலிருந்து அகற்றுவதற்கு இவ்வொப்பந்தம் பயன்படுமென மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் திரு நம்பூதிரிபாத் கருத்துத் தெரிவித்தார். தேசிய நலனுக்கு இது உகந்ததாய் இருக்குமானால் இது வரவேற்கப்படவேண்டிய ஒன்றென ஜனசங் தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் தெரிவித்தார்.

இதேபோல முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. வி. கே. கிருஷ்ணமேனன் உட்பட மற்றும் தலைவர்களும் இவ்வொப்பந்தத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர்.

## முஜிபுர் ரஹ்மானுக்கு அமெரிக்கா பரிவு

நியூயோர்க், ஆக. 10

கிழக்குப் பாகிஸ்தான் தலைவர் ஷேக்முஜிபுர் ரஹ்மான் விஷயத்தில் கருணையோடு நடக்குமாறு பாகிஸ்தான் அரசை அமெரிக்க அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஷேக்முஜிபுர் நாளை (புதன்கிழமை) விசேடமாக அமைக்கப்பட்ட ராணுவ நீதிமன்றத்தில் இரகசியமாக விசாரிக்கப்படவிருக்கிறார் என்ற பாகிஸ்தான் அரசாங்கத்தின் அறிவித்தலை அடுத்தே இந்த வேண்டுகோளை அமெரிக்கா விடுத்திருப்பதாகத் தெரிகிறது. திரு முஜிபுர் மீது பாகிஸ்தானுக்கு எதிராக யுத்தம் தொடுத்தல் மற்றும் இதுபோன்ற வேறுசில குற்றங்களும் சுமத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் இந்த வேண்டுகோள் மனிதாபிமானத்தின் அடிப்படையில் விடுக்கப்பட்டதே தவிர அரசியல் ரீதியிலல்ல என அமெரிக்க ராஜாங்க இலாகாப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

### தீர்த்தம்

அல்லைப்பிட்டி, செவ்.

வேலணை தெற்கு முருகன் ஆலயத்தில் கதிர்காம தீர்த்த உற்சவம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் சபாசதாசிவம் குழுவினரால் "வள்ளிதிருமணம்" என்னும் பொருள் பற்றிய வில்லிசை நிகழ்ச்சியும், ஊர்காவற்றுறை திருமாறன் குழுவினரதும், பண்டத்தரிப்பு "றெக்ஸ்" குழுவினர்களதும் இன்னிசை நிகழ்ச்சிகளும், தீக்குளிப்பு வைபவமும் நடைபெற்றது. அன்று அதிகாலை வேலணைக் கடலில் தீர்த்த வைபவமும் நடைபெற்றது.

### 'உடன் நியமிக்கவும்'

ஒட்டுசுட்டான், செவ்.

ஒட்டுசுட்டான் தமிழ் கலவன் பாடசாலைக்குப்போதிய ஆசிரியர்களை உடன் நியமிக்குமாறு பாடசாலைப்பெற்றோர் ஆசிரிய சங்கச் செயலாளர் திரு. செ. தருமலிங்கம் வவுனியாப்பகுதி கல்விக் காரியாலயத்தைத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் பயிலும் இப்பாடசாலையில் இரண்டே ஆசிரியர்கள் மட்டுமே கடந்தஒருவருடமாகஇருந்து வருவதாகவும், இதனால் மாணவர் கல்வி பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தந்தியில் கூறப்பட்டிருப்பதுடன் பலதடவைகள் தொகுதி எம். பி.யையும் வவுனியா கல்விப்பகுதியையும் கேட்டிருந்தும் இதுவரை இப்பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை நீக்கப்படவில்லையென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### விமானப்பெண் ஷீலாவின் 100-வது சாதனை

லண்டன், ஆக. 10

தன்னந்தனியாக ஆகாயத்தில் பறக்கும் விமான அழகி ஷீலா ஸ்கொட் வானகத்தில் தனது 100-வது சாதனையை நிலைநாட்டி உள்ளார். அவர் உலகத்தைச் சுற்றி 34,000 மைல் தூரம் பறந்த பின் கடந்த புதன்கிழமை லண்டனில் உள்ள ஹீத்ரோ விமான நிலையத்தில் வந்து இறங்கி இச்சாதனையை நிலைநாட்டினார்.

ஷீலா முன்பு நடிகையாக இருந்தவர். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் விமானம் ஓட்ட ஆரம்பித்தார். இவர் கடைசியாக நிகழ்த்திய நீண்ட தூர விமான ஓட்டத்தின்போது வேகத்திலும் ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

அவுஸ்திரேலியாவிலுள்ள டார்வினில் இருந்து லண்டனுக்கு சிறு விமானத்தில் செல்ல எடுக்கும் 5 நாள் காலத்தை 3 அரை நாட்களாக அவர் குறைத்திருக்கிறார். சிறு விமானம் ஒன்றில் முதன் முறையாக தனியாக வட துருவத்தின் மீதாகப் பறந்திருப்பவரும் ஷீலா தான்! இரட்டை இயந்திரம் பொருத்திய அவரது குட்டி விமானம் விமான நிலையத்தில் வந்திறங்கியபோது 2,000 பேர் ஆரவாரம் செய்து அவரை வரவேற்றார்கள்.

பயணத்தின்போது ஷீலாவுக்கு ஏற்பட்ட உடல், உள மாற்றங்களை விமானத்தில் உள்ள கருவி செயற்கைக் கோள் ஒன்று மூலமாக பூமிக்கு அறிவித்தது. நீண்ட தூரப்பயணங்களை சிறிய விமானங்கள் மேற்கொள்ளும்போது செயற்கைக் கோள்கள் மூலம் அவற்றைக் கண்காணிக்கமுடியுமா? என்று அறிந்து கொள்வதற்கு இந்த தகவல்கள் உதவும்.

### இடமாற்றம்

சுழிபுரம், செவ்,

மானிப்பாய் பட்டினசபையின் விகிதராக கடமையாற்றிய திரு. க. சிவலிங்கம் இம்மாதம் முதல் யாழ்ப்பாண மாநகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## எந்த நாட்டுக்கும் எதிரானதல்ல

— குரோமிக்கோ

புதுடில்லி, ஆக.10

இந்தியாவும் சோவியத் யூனியனும் செய்துகொண்ட ஒப்பந்தம் எந்தவொரு நாட்டுக்கும் எதிராகச் செய்துகொண்டதல்ல. இரு நாடுகளுக்குமிடையே சமாதானம், நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றைப் பலப்படுத்தவே இவ்வொப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதென இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டபின் சோவியத் வெளியுறவு அமைச்சர் திரு. குரோமிக்கோவை கௌரவிக்கும் முகமாக இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுவர்ண்சிங் புதுடில்லியில் விருந்தொன்று அளித்தார்.

இந்த விருந்தில் உரையாற்றிய திரு. குரோமிக்கோ எமது இரு நாடுகளுக்குமிடையே செய்துகொண்ட ஒப்பந்தம் மூன்றாவது நாடொன்றுக்கு எதிராகச் செய்யப்பட்டதல்ல. இரு நாடுகளுக்குமிடையே நீண்டகாலமாக இருந்து வந்த நட்புறவு ஒத்துழைப்பு ஆகியவற்றில் எடுத்துக்கொண்ட முயற்சியின் முடிவு தான் இவ்வொப்பந்தம். இந்த ஒப்பந்தத்தை மேற்கத்திய நாடுகளும் கிழக்கு நாடுகளும் வரவேற்குமென்றே நம்புகின்றேன். இந்த ஒப்பந்தத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த தலைவர்கள் முயற்சி செய்வார்கள். இதனை இந்திய ஆட்சிமன்றம் வரவேற்றதைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். சோவியத் யூனியனும் இதனை வரவேற்கும் என உறுதி கூறுகின்றேன் என்றார்.

இந்தியவெளியுறவு அமைச்சர் திரு சுவர்ண்சிங் பேசுகையில் அமைதியையும் எமது வலுவையும் வலுப்படுத்தவே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் இது எந்த நாட்டுக்கும் எதிரானதல்ல. மற்ற நாடுகளும் இதுபோலச் செய்து கொள்ளலாம். இவ்விதமான ஒப்பந்தங்கள் உலக அமைதிக்கு வழிவகுக்கும் என்றார்.

**இந்திரா கருத்து**

இரு நாடுகளுக்குமிடையே இவ்வித ஒப்பந்தம் செய்துகொண்டதினால், இந்தியா தனது நடுநிலைமைக் கொள்கையை கைவிட்டுவிட்டதாக யாரும் கருதிவிடக் கூடாது. இருநாடுகளுக்குமிடையே நட்புறவை மேலும் வளர்க்கவே செய்யப்பட்டது என்று நேற்று நடைபெற்ற மிகப் பிரமாண்டமான ஆளும் காங்கிரஸ் கட்சியின் வங்காளதேச ஆதரவுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இவ்வாறு தெரிவித்தார்.

**ஐ. நா. - அமெரிக்கா ஆச்சரியம்**

இவ்விரு நாடுகளுக்குமிடையே இவ்வித ஒப்பந்தம் செய்யப்பட்டதையிட்டு,

(5-ம் பக்கம் பார்க்க)

ஃபீனேல்




தொற்றுத்தடை மருந்து

ஃபீனேல் தொற்றுத்தடை மருந்து குளிக்கும் அறை, வடிகால், கட்டுடத்தனம் ஆகியவற்றில் உபயோகிக்கச் சிறந்த நவீன ஆராய்ச்சியின் புதிய படைப்பு. ஃபீனேல் வன்மைமிக்கது பாதுகாப்பானது.

எங்கும் கிடைக்கும்.

# 'கிராமங்களின் தேவைகளை மக்களே கவனிக்க வேண்டும்'

வவுனியா, செவ்.

கிராமங்களிலுள்ள சில அத்தியாவசிய தேவைகளை கிராம மக்களே கவனிக்க வேண்டும். கிராமங்களில் கிராம மக்களின் ஆட்சிபூரணமாக நடைபெறவேண்டும். கிராமங்களின் பொதுத் தேவையான காரியங்களில் கஷ்டம் விளைவிப்பவர்களை அரசாங்க உத்தியோகத்தர் மட்டும் கவனிக்கவேண்டுமென்பதில்லை. நீங்களே அவர்களைக் கண்டித்து, அரசாங்கத்திடம் ஒப்படைக்கும் பொறுப்புஇருக்கவேண்டும்'

இவ்வாறு ஆறுமுகத்தான் புதுக்குளத்தில் நடைபெற்ற சிரமதான வீதிதிருத்தத்தின் போது கோவில் வீதியைத் திறந்துவைத்துப்பேசிய வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். இலஞானம் பேசும்போது குறிப்பிட்டார்.

மேலும் அவர்பேசுகையில் கிராம மக்கள் அரசாங்கக் காணிகளை வருங்காலச் சந்ததிக்குச் சேர்த்து அவற்றை வெறும் மந்துக்காடுகளாக வைத்திருந்தால் மட்டும் போதாது. அவற்றைத் திருத்தி வெங்காயம் மிளகாய் போன்ற பிரயோசனமான பயிர்களை வைத்துதம்பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும்' என்றார்.

அடுத்து நடுச்செட்டிக்குளம் கிராமசபைத் தலைவரும் வவுனியா மாவட்ட கிராமசபைகளின் சமாசக் காரியதரிசியும் வவுனியா மாவட்ட சிரமதானக்குழுவின் ஆலோசகருமான திரு. பொ திருஞானசம்பந்தன் பேசுகையில் நாம் எமது கிராம மக்களிடையே பலமான ஒற்றுமையைத்தேடிக் கொள்ள சிரமதானம் ஒரு வாய்ப்பாக இருக்கின்றது தமது தேவைக்காக நாம் பிறரை நம்பி ஏமாறுவதற்குப்பதிலாக சிரமதானமூலம்

---

## 'கடவுளைக் காணலாம்'

தாவடி, செவ்

'கடவுளைக் காணமுடியாவிட்டால் கடவுள் இல்லையென்று கூறிவிடமுடியுமா? ஒரு மாணவன் நன்குபடித்து பரீட்சைக்குரிய தராதரத்தின்படி தயார்செய்து பரீட்சை எடுத்தாலே சித்திபெறலாம் அதேபோன்றுதான் எம்மை நாம் பக்குவப்படுத்தித் தயாராக வைத்திருந்தால் கடவுளைக் காணமுடியும். உலக வாழ்க்கையின் இடுக்கண் களைய இறைவன் சுந்தரமூர்த்திநாயனருக்கு நற்தோழனாக அமைந்தார்.

இவ்வாறு கொக்குவில் மேற்கு சைவ வாலிபர் சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை பரிசளிப்பு விழாவில் கலந்து உரைநிகழ்த்திய பண்டிதர் திரு. இரா. சிவசுப்பிரமணியம் கூறினார். திரு. த. தர்மலிங்கம் தலைமை வகித்தார்"

மேற்படி சைவ வாலிபர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டியில் பின்வருவோர் பரிசுகள் பெற்றனர். முதலாம் பிரிவு: ந. குமாரவேல், இ ஜெயகுமார், ஞ ஸ்ரீரங்கநாயகி. இரண்டாம்பிரிவு; க லலிதாதேவி, சு ஞானேஸ்வரி; சு நகுலேஸ்வரன். மூன்றாம்பிரிவு: த குமாரதாஸ் செ வசந்தி, கே. சாந்தி, நான்காம்பிரிவு: ச. பாலச்சந்திரன், ஊ கிருபானந்தன், சி சுப்பிரமணியம்,

பரிசுபெற்றோருக்கு தலைமையாசிரியர் திரு. தருமலிங்கம் பரிசுகளை வழங்கினார் இறுதியில் சங்க மாணவர்களின் கூட்டுப் பாடலும் அருட்கவி சீ விநாசித்தம்பியினது கதாப்பிரசங்கமும் இடம் பெற்றன.

---

## எமது தேவைகளை இலகுவாகவும் தெளிவாகவும் பூர்த்திசெய்து கொள்ளமுடியும். சிரமதானத்தில் நமது கிராம வாலிபர்களை பங்குகொள்ளச் செய்வதால் அவர்கள் தவறான வழிகளில் செல்லும் நோக்கத்திலிருந்தும் வேறுபட்டு நமது கிராமத்துக்கும் நாட்டுக்கும் பிரயோசனமுள்ளசமுதாயமாக விளங்குவார்கள் என்றார்

சிரமதானவேலையிக்குமார் 15 உழவுயந்திரங்களும் 300 வாலிபர்களும் பங்குபற்றினர்

......

## வலை இல்லாது கஷ்டம்

மாவிட்டபுரம், செவ்

மயிலிட்டி, தாழையடி, மாதகல் ஆகிய பகுதிகளில் கூடியளவு இறால் பிடிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் இறால் பிடிப்பதற்கான சுருக்கு வலை இங்கு இல்லாததால் பெரும் கஷ்டப்படவேண்டியுள்ளது. ஆகலால் சுருக்கு வலையை வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்து வழங்க வேண்டுமென்று மீன்பிடி அமைச்சரைக் கோரியுள்ளார் மயிலிட்டிசென்மேரிஸ் மீன்பிடிச் சங்கத் தலைவர் க. லோறன்ஸ். ......

## ஆண்டுக் கூட்டம்

குருநகர், செவ்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது

இக் கூட்டத்தை இவ் வருடம் யாழ்ப்பாணத்தில் நடத்துவதென சென்ற மாதம் கூடிய சங்க செயற்குழு தீர்மானித்தது.

......

## 'சமய நம்பிக்கை அருகி வருகிறது'

மாவிட்டபுரம் செவ்

'சமயக்கல்விக்கும் கல்வித்திட்டத்தில் முக்கிய இடம் அளிக்கவேண்டும். சமயக் கொள்கைகளை அறிந்தவன் குறுக்குவழியில் செல்லமாட்டான். சமயம் தனிமனிதனையும் அவன் அங்கம் வகிக்கும் சமுதாயத்தையும் உயர்த்த வழிகாட்டுகிறது'

இவ்வாறு தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை நிறுவியவர் நினைவுதினமும், பெற்றோர்தின விழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமயம் விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் தெல்லிப்பளைக் கிராம சபைத் தலைவர் திரு. எம். சிதம்பரநாதன் கூறினார்.

மேலும் அவர்பேசுகையில் நல்லசமுதாயத்தைக் கட்டியெழுப்பவேண்டுமானால் கல்வித்திட்டத்தில் சமயக் கல்வி முக்கியமாக இடம்பெறுவதுடன் கல்லூரிகளில் சமயக் கல்வி புகட்டப்படுகின்றதா என்று கல்வியமைச்சு கவனிக்கவும் வேண்டும் என்றார்.

வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் ச. அம்பிகைபாகன் பேசுகையில் இன்றுள்ள நிலையில் சமயக் கல்வி மட்டுமல்லாமல் கடவுளைப்பற்றிய கொள்கைகளும் சமய நம்பிக்கையும் அருகி வருவதாயும் சமயம் ஒரு வேடிக்கையான பொருள் போல இன்று பாவிக்கப்படுவதாகவும் இந்த நிலை இனி மேலும் வளராமல் தடுக்கும் பொறுப்பு சைவப்பாடசாலைகளில்தான் தங்கியுள்ளதென்றும் கூறினார்

சைவப்பிரகாச வித்தியாசாலையின் முன்னாள் அதிபர் திரு. செ சிவசுப்பிரமணியம், தற்போதைய அதிபர் திரு. த. பழனிவேலு, திருகுமாரசாமி உட்படப் பலர் உரையாற்றினர். மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## சுப்ரீம் கோர்ட் வழக்குகள்

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் கொலை முயற்சி வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ வி குலசேகரன் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது விசாரணையை அடுத்தமாதம் 8ம் திகதிக்கு நீதியரசர் ஒத்திவைத்தார்.

புறக்டர் வி கனகசபைக்கு எதிரான மூன்று வழக்குகள் அடுத்த மாதம் 6ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன

பருத்தித்துறை நகைக்கடை முதலாளி கொலை வழக்கு இம்மாதம் 28ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

......

## உடகம வருகிறார்

பருத்தித்துறை, செவ்.

கல்வியமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. பிரேமதாச உடகம இம்மாதம் 17-ம் திகதி வடபகுதியில் நடக்கவிருக்கும் சித்திரக் கண்காட்சியைத் திறந்து வைப்பதற்காக வருகிறார்.

அன்று முற்பகல் ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்க யாழ்ப்பாணக் கிளைப் பிரதிநிதிகள் அவரைப் பேட்டிகாண்பதுடன் அவருக்கு யாழ்ப்பாணம் வாடி வீட்டில் நண்பகல் போசனமும் அளிப்பர். திரு. உடகம இங்கு தங்கியிருக்கும் நேரத்தில் வடபகுதியிலுள்ள சகல ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளையும் தரிசிப்பதுடன் மூடப்படவிருப்பதாகக் கூறப்படும் நல்லூர் ஆசிரியர் கலாசாலைக்கும் விஜயம்செய்வார்

......

## நுழைவு கட்டணம் அதிகரிப்பு

கோப்பாய், செவ்

தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்குச் செல்வதற்கான நுழைவுகட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது

விடுதலை போயா நாட்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் வயதுவந்தவர்களுக்கு ஒரு ரூபாவும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு (எல்லா நாட்களும்) ஐம்பது சதமும் விதிக்கப்பட்டுள்ளது விடுதலை போயா நாட்களில் வயதுவந்தவர்களுக்கு ரூபா 1-25 சதம் விதிக்கப்பட்டுள்ளது. வாகனங்களுக்கு 2 ரூபா விதிக்கப்பட்டுள்ளது. ......

## கடத்தல் முறியடிப்பு

மாவிட்டபுரம், செவ்

இந்தியாவுக்கு கடத்த எத்தனித்த 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை பொலிசார் கைப்பற்றினர்கள்.

காங்கேசதுறைப் பொலிசாருக்கு கிடைத்த தகவலின் பேரில் பொறுப்பதிகாரி திரு ஏ ஜேக்கப் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி மயிலிட்டியில் வைத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கராம்பு சாதிப்பூ ஆகியவற்றைக் கைப்பற்றியதுடன் இருவரையும் கைது செய்தது.

இது குறித்துவிசாரணை நடத்திய சுங்க உதவிக்கலெக்டர் எம் வை செனரத்திறு பிரஸ்தாப நபர்களுக்கு 1500 ரூபா அபராதம்விதித்தார். ......

## ஜொலிஸ் வென்றது

பருத்தித்துறை, செவ்

வதிரி தமிழ்மன்ற ஆதரவில் நடந்துவரும் ஊரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ் பொலிஸ் விளையாட்டுக்கழகமும் சாவகச்சேரி மோகனதாஸ் கழகமும் மோதிக்கொண்ட போது ஜொலிஸ் கழகம் 3-0 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. திரு கே. இரத்தினசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்

வட அயர்லாந்தில் தொடர்ந்துமோதல்

# பெல்பாஸ்ட் நகரில் 13 பேர் கொலை!

பெல்பாஸ்ட். ஆகஸ்ட் 10

வடஅயர்லாந்தின்றோமன் கத்தோலிக்கப் பகுதியில் நடந்த வன்முறைச்சம்பவங்களில் 13 பேர் கொல்லப்பட்டனர். 100க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். பயங்கரவாதிகளென சந்தேகத்துக்குரியவர்களை கைதுசெய்து தண்டிப்பதென அரசாங்கம் எடுத்த முடிவை அடுத்தே இவ்வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன. இவ் வன்முறைச் சம்பவங்களின் பொழுது 2 ஆண்களும் ஒரு பெண்ணும் கொல்லப்பட்ட முறை மிகவும் வேதனைக்குரியது. இப்பகுதியிலிருந்து நூற்றுக்கணக்கான அகதிகள் ஐரிஸ் பகுதிக்குள் சென்றதாகச் சொல்லப்படுகிறது. கத்தோலிக்கப்பகுதியிலுள்ள ஒரு தெருவில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் சேதத்துக்குள்ளாயின.

முன்பு பெல்பாஸ்டில் ஒருவரும், ஐரிஸ் குடியரசு எல்லைக்கருகில் ஒரு போதகரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவ்வன்முறைச் சம்பவங்களை அடுத்து 300 பேருக்கு மேற்பட்ட சந்தேகநபர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

வடஅயர்லாந்தில் றோமன் கத்தோலிக்கருக்கும் புரட்டஸ்தாந்து இனத்தவர்களுக்குமிடையில் தொடர்ந்து மோதல்கள் நிகழ்ந்து வருவது தெரிந்ததே.

......

## கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

இன்று நாட்டின் அபிவிருத்தியை பெருக்க உதவுவதற்கும், கிராமங்களை வளர்ச்சியடையவும் சமூகசேவைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆதலால் சனசமூக நிலையங்களின் செயலாளர்களைக் கூட்டி அவர்களுக்கு விசேடபயிற்சி வகுப்பை நடத்தவேண்டும்,

இவ்வாறு யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாசத்தின் பொதுச்சபைக் கூட்டம் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெற்ற சமயம் அரசைக் கோரும் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

திரு. வே. சுப்பையா தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

......

## 6மாதம் கடூழியச்சிறை

வரணைவற்றுறை செவ்

அல்லாரிப்பை வாசியான ஒருவரை பொல்லால் அடித்துப் படுகாயப்படுத்தியதாக நாயன்மார்கட்டைச் சேர்ந்த ஒருவர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி திரு சி இ மெண்டிஸ் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு 6 மாதக் கடூழிய சிறைத்தண்டனை விதித்தார்.

## இவர்கள் கஷ்டம் நீங்கியது

பூநகரி, செவ்வாய்

இதுவரை காலமாகத் தபால்விநியோக வசதியீனத்தால் கஷ்டமுற்றுவந்த பூநகரி ஆரியங்பொந்து குடியேற்ற வாசிகளுக்கு நல்லகாலம் பிறந்துள்ளது. இவர்கள் பலமாதகாலமாக வடபகுதித் தபால் அத்தியட்சகரையும், கிளிநொச்சி எம்பி திரு வி ஆனந்தசங்கரியையும் தபால் வசதி செய்து தருமாறு கோரி மகஜர்கள் அனுப்பியிருந்தனர். தொடர்ந்து இப்பகுதிக்கு இம்மாதம் தொடக்கம் தபால் விநியோக வசதிசெய்யப்பட்டுள்ளது. தபால் விநியோகஸ்தர் ஒருவரை அரசு இப்பகுதிக்கு நியமித்துள்ளது.

......

## இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி, செவ்

தாளையடி மீன்பிடி பரிசோதகராய்க்கடமையாற்றிய திரு எஸ். நவரத்தினம் முல்லைத்தீவுப் பகுதிக்கு கூட்டுறவு மீன்பிடிச் சங்கங்களின் பரிசோதகராகவும் தொண்டைமானாறு மீன்பிடி சோதகராய் கடமையாற்றிய எஸ். சச்சிதானந்தம் தாளையடி மீன்பிடி பரிசோதகராகவும் 1-8-71 தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறைப்பகுதியில் கூட்டுறவு மீன்பிடிச் சங்கங்களின் பரிசோதகராய்க் கடமையாற்றிய திரு. ஆர். சச்சிதானந்தம் காங்கேசன் துறைப் பகுதிக்கும் யாழ்ப்பாணம் மீன்பிடிபரிசோதகராய்க் கடமையாற்றிய திரு. பி. இராமநாதன் பருத்தித்துறைப்பகுதி மீன்பிடிச் சங்கங்களின் பரிசோதகராகவும் 1-8-71 தொடக்கம் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

---

பச்சிலைப்பள்ளி, செவ்

கல்லடைக்காடு அரிச்சப்பலேந்தி மாதா கோவில் திருநாள் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நோவனைகள் நடைபெறவிருக்கின்றன. 14-ந் திகதி மாலை நற்கருணைப்பிரசுரமும் வேஸ்பரும் மறுநாள் பெரிய பாடற் பூசையுடனும் திருநாள் முடிவுபெறும். ஆராதனைகளை வணபிதா இம்மானுவேல் சுவாமியார் நிறைவேற்றுவார்.


வைத்தியர்களுக்கு

ஆயுர்வேத மருந்துக்கூட்டு சபை
(CEYLON AYURVEDIC DRUG CORPORATION)
இறக்குமதி செய்து விநியோகிக்கும்
மருந்துச் சரக்குளும்

நாவின்ன
ஆயுள்வேத ஒளடதசாலை
(AYURVEDA DRUG FACTORY)
தயாரிப்பு மருந்துகளும் அறிமுகஅட்டை பேரில்
கட்டுப்பாட்டு விலைகளில் யாழ்ப்பாணத்தில்
கிடைக்குமிடம்:

சுந்தரம் பிறதர்ஸ்
73; மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

# தமிழகத்தில் கலைஞர்களுக்கு நல்லகாலம் பிறந்துள்ளது

தமிழகத்திலே முதல் முதலாக ஒரு கலைஞர் முதலமைச்சராக வந்திருப்பதால் அங்கு கலைஞர்களுக்கெல்லாம் நல்லகாலம் பிறந்திருக்கிறது என்று கொழும்பு ஆடிவேல் விழாவுக்காக வந்துள்ள மதுரை சேதுராமன் அவர்கள் என்னிடம் கூறினார். எந்த விதத்தில் என்று கேட்டேன்.

வயோதிபராகி வருவாயற்ற கலைஞர்களுக்கெல்லாம் தமிழக அரசு இப்போது உபகாரச் சம்பளம் அளித்து வருகிறது. ஐம்பது ரூபாய் முதல் இருநூறு ரூபா வரையிலும் அளிக்கப்படுவதாயும் கோயில்களில் நாதசுரக்காரர்களுக்கு மிகக் குறைந்த அளவு ஊதியம் நூறு ரூபாவாவது அளிக்கப்படுவதாயும் கலைஞர்களின் மதிப்பும் அந்தஸ்தும் அந்த ஆட்சியில் பொதுவாக அதிகரித்துள்ளதாகவும் சொன்னார். இதைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது. நம் இலங்கையிலும் கலைஞர்களின் கஷ்டங்கள் எப்போது தீரப்போகிறதோ?

நெற்றியில் குங்குமமும் திருநீறும், கழுத்தில் தங்கம் கட்டிய ருத்ராக்ஷமாலையும் தங்கச்சங்கிலியிலே பூட்டிய விநாயகப்பெருமான் திருவுருவமும் இப்பாண்டி நாட்டுக் கலைஞரின் தெய்வ பக்தியைக் காட்டுகின்றன. கம்பீரமான தோற்றம். முகத்தில் நல்ல செலிவு, இடுப்பில் தூய கதர் ஆடை. இத்தோற்றத்துடனே அவர் புதன்கிழமை காலை சம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமி கோவில் வாசலில் அழகிய ரதத்தின் முன் வந்ததைக் கண்டதும் அவரைப் பார்க்க ஆவலுடன் கூடியிருந்த ஏராளமான கலாரசிகர்கள் மகிழ்ச்சியுடன் கரகோஷம் செய்து வரவேற்றார்கள்.

'நீங்களெல்லாம் அதிர்ஷ்டசாலிகள். சேதுராமனை நேரில் காணவும் கேட்கவும் செல்லுகிறீர்கள். அந்த அதிர்ஷ்டம் எங்களுக்கில்லையே' என்று ஓர் அன்பர் தம் அறையிலிருந்து புறப்படுகையில் அங்கிருந்த மற்ற சகாக்கள் ஏமாற்றத்துடன் கூறினராம் வெள்ளவத்தையில் அவர் அளிக்கும் கலைவிருந்துக்குப் பெருங் கூட்டம் வரக் காத்துள்ளது.

**ஐயாறன் எழுதுவது**

தமிழகத்தை விட ஈழத்தில்தான் சங்கீத ரஸிகர்கள் கூட்டம் நாதசுரத்தைக் கேட்க அதிகம் வருவதாக தெரிவித்தார் அவர். இதனால் இங்கு வரும் கலைஞர்களுக்கு அதிக உற்சாகம் தமிழகத்தில் உள்நாட்டுச் சரக்குதானே என்று ஒருவித அலட்சியமாம். இங்குள்ள பொதுமக்கள் இக்காலத்திலே தமிழகம் செல்லுவதென்பது சுலபமன்று. எவ்வளவோ தடைகள். செலவுகள். அப்படிச் சென்றாலும் இவ்வித கலைஞர்களின் அரிய விருந்தைக் கேட்க அங்கு சான்ஸ் குறைவு. ஆகவே அவர்களே இங்குவரும்போது தமிழகமே இங்கு வந்துவிட்டதாகக் கருதி, காசு பணம் செலவில்லாமல் அக்கலைஞர்களை நேரில் பார்க்கவும், கலையைக் கேட்டு இன்புறவும் முடிவதால் கூட்டம் வரவர அதிகமாகி வருவதில் வியப்பில்லை. எப்படியும் ஈழமக்களுக்கு கலா ரஸனை அதிகமென்று அவர் கூறியதும் எனக்கு ஒருவித பெருமையாக இருந்தது.

இக்கலைஞர்களுக்கு விஸா கிஸா எல்லாம் எடுத்து அவர்களை வரவழைக்க சம்மாங்கோடு கோயில் நிர்வாகிகள் எவ்வளவு சிரமப்பட்டார்களோ! அவர்களுக்கு ஈழத்தின் பல்லாயிரக்கணக்கான ரஸிகர்களின் நன்றியும் உரித்தாகும்.

கலைஞர் சேதுராமனுக்கு ஒரே ஒரு மகன்தானாம். வயது 14 ஆவதாயும் படிப்பதாகவும் அறிந்தேன். இதுவரை நாதசுரப் பயிற்சி பெறுவதாகத் தெரியவில்லை. புகழ்பெற்ற மதுரை பொன்னுச்சாமிப்பிள்ளையின் சகோதரர்களான சேதுராமன் சகோதரர்கள் மூலம் வழிவழியாக அக்குடும்பத்தில் இக்கலைச் செல்வம் வளர்ந்துவருகிறது. ஆங்கிலப்படிப்பு படிக்கவேண்டியதுதான். ஆனால் அப்படிப்பால், குடும்பக்கலை தடைப்பட்டுவிடக் கூடாது. கலெக்டர் வேலையே கிடைப்பதாயினும் அது சம்பள அடிமைத் தனம்தான்! ஒரு கலைஞருக்குள்ள இன்பமும், சுதந்தரமும் கம்பீரதையும், வருவாயும் கிடைக்குமுடியுமா? தொழில் வகையைப் பற்றி இக்காலத்தில் வந் புகுந்துவிருர்கள். தச்சு அல்லது கடற்தொழில் எல்லாராலும் முடியுமா? குடும்பம் அல்லது குலத் தொழில்தான் சுலபமாக வரும். அது இரத்தத்தில் ஊறிப்போனது. தொழிலில் உயர்வுதாழ்வு பார்க்கவே கூடாது. எல்லாத் தொழிலும் சமூகத்துக்கு முக்கியமானதே. அதனால் மதிப்பானதே. ஆனால் துரதிருஷ்டவசமாக குலத்தொழில் பற்றி தாழ்வுமனப்பான்மை ஏற்பட்டு, அதில் பயிற்சி பெற வாலிபர்கள் தயங்குகின்றனர். இந்த மனப்பிராந்தி நீங்கினால் வேலையில்லாக்கஷ்டமும் வெகு

(6-ம் பக்கம் பார்க்க)

# நல்லூர் நாற்பது

[ கவிஞர் வி. கந்தவனம் ]

## சிறப்பீர்பத்து

விடுநலத் தூய்மைமிக விளங்கு மெங்கும்
　விண்ணவரின் நன்மையுடன் விரதம் கொள்ளக்
கூடுமடி யார்களது குமரா விள்ளக்
　குன்றிலருள் பெய்துதவக் குடிகொள் வாயே
நாடுகொடும் போக்குகளை நன்றே தள்ளி
　நன்மைதரும் நல்வழியை நாளும் உள்ளி
நாடிவிடு தொல்லைகளை நாசஞ் செய்யும்
　நல்லூரான் கொடியேற்றம் நாளை என்றே!

விண்ணளவும் வியக்கின்ற வீதிப் பந்தல்
　விருதோரணங்களெழில் விளக்குக் கும்பம்
கண்ணை அட கட்டிவிடுங் கலைக ளூறும்
　காட்சிபல கலைஞர்களின் மாட்சி கூறும்
தண்ணளவே கதிரவனுந் தன்மை மாறும்
　தக்கவழி காட்டிநலத் தன்மை பூட்டி
மண் ணுலகி லடியவரின் வாழ்வை யாக்கும்
　மயிலோனின் கொடியேற்றம்மறுநாள் என்றே!

கூடிடுவர் மண்விழாக் கும்பல் வெள்ளம்
　சுற்றுமிக் கொடுமைகளைக்கொல்லும் நின்னைப்
பாடிடுவர் பண்ணோடு பைந்தாள் தேனைப்
　பருகிடுவர் பதறிடுவர் பத்தி முத்தி
ஆடிடுவர் அப்பா ஓ! ஆட்கொள் என்பார்
　அலறிடுவர் குளறிடுவர் ஆவல் மீறி
வாடிடுவர் வலியபிடி வாதம் நாளும்
　வாழ்வுநலம் நல்லூரான் வைப்பா னென்றே!

தமிகும்பல் சோடிதவத் தண்ணூர் நல்லூர்
　தன்னிலே ஊரோங்கத் தரணி போகக
வெமிகும்பல் இன்பங்கள் இலங்க என்று
　மிருன்மாளும் ஒளிவீச ஏற வென்றே
செங்குந்த செம்முன்னச் சிலர் சோனத்
　தேர்வைத்துக் கொடிக்கான சேலை சப
பொங்கும்தல் வேதமுடன் மங்களங்கள்
　பொருந்தவுயர் பொழுதுகொடி போற்றிஏறும்!

தித்திக்கும் மருந்தாகித் திறந்து கண்ணைச்
　சிறந்துய்யும் வழிதன்னைத் தெரிக வென்றே
பத்தர்க்கு வழிகாட்டிப் பசியும் போக்கிப்
　பார்த்துள்ளம் பழுத்தூறப் பத்தாம் நாளில்
முத்தொளிரு மஞ்சத்தில் மூற்பி றப்பில்
　மூண்டுள்ள தீவினைகள் முடித்தே தன்ருய்
எத்திக்கும் இடங்கூடி இருகை ஏந்தி
　ஏற்றவே போற்றவே எழுவாய் நீயே!

(தொடரும்)

# யாஹ்யா-டிக்காகான் கருத்து வேறுபாடு?

கல்கத்தா, ஆக. 10

கிழக்குப் பாகிஸ்தான் ராணுவ சட்ட நிர்வாகி ஜெனரல் டிக்காகானுக்கும் ஜனாதிபதி ஜெனரல் யாஹ்யாகானுக்கு மிடையில் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஜெனரல் டிக்காகானைப் பதவியிலிருந்து விலகும்படி யாஹ்யாகான் கோரிக்கை விடுத்ததாகவும் அதனை டிக்காகான் மறுத்துவிட்டதாகவும் இந்தியாவுக்கு வந்துள்ளவர்களில் ஒருவர் கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு 72 மணிநேரத்தில் முடிவுகாணுவதாகக் கூறிக் கொண்டுதான் ஜெனரல் டிக்காகான் அங்கு சென்றாராம். ஆனால் இப்பொழுது பலமாதங்கள் ஆகியும் ஒரு முடிவும் தெரியாமலிருப்பதால் அவர் மீது யாஹ்யாகானுக்கு நம்பிக்கை போய்விட்டதாக அந்தவர்த்தகர் கூறினர்.

ராணுவத்திலும்பெரிய அதிகாரிகள் மத்தியில் அதிகாரப் போட்டி உருவாகியிருப்பதாகவும் அவர்கள் ஒருவரை ஒருவர் ஒழித்துக்கட்ட திட்டமிடுவதாகவும் கூறப்படுகின்றது.

## எந்த...

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஐ. நா, ராஜ்யவட்டாரங்களிலும் அமெரிக்காவிலும், ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இதே நேரத்தில் இவ்வொப்பந்தம் பாகிஸ்தானுக்கு எதிராகச் செய்து கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறதென வாய்ஸ் ஆப் அமெரிக்காவின் நிருபர் தெரிவித்துள்ளார்.

### குரோமிக்கோவுக்கு பாக். அழைப்பு

இந்த ஒப்பந்தம் பாகிஸ்தான் அரசியல் வட்டாரங்களில் பலத்த அபிப்பிராயங்களைத் தோற்றுவித்துள்ளன. பாகிஸ்தானுக்கு திரு. குரோமிக்கோவை விஜயம் செய்யுமாறு பாகிஸ்தான் அரசாங்கம் அழைத்திருப்பதாக அறியப்படுகிறது. ஆனால் குரோமிக்கோ இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் செல்வாரா என்பதுதெரியவில்லை. பாகிஸ்தான் வட்டாரங்களில் இவ்வொப்பந்தம் காரணமாக அதிர்ச்சி நிலவுவதாகவும் தெரியவருகிறது.

# செனட்டர் கென்னடி இந்தியா வந்தார்

புதுடில்லி, ஆக. 10

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப் கென்னடியின் சகோதரரும் செனட்டருமான எட்வேர்ட் கென்னடி இன்று கல்கத்தா வந்துசேர்ந்தார்

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளின் நிலையை அறிவதற்காகவும் அகதிகள் முகாம்களைப் பார்ப்பதற்காகவும் அவர் வந்துள்ளார்

செனட்டர் கென்னடி இன்று காலை கல்கத்தா வந்து சேர்ந்தவுடன் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இந்தியாவுக்குள் வந்துள்ள 75 லட்சம் அகதிகளின் நல்வாழ்வுக்கு தமது விஜயம் உதவக்கூடும் என்று நம்புவதாகக் குறிப்பிட்டுள்ளார்

இந்தியாவில் அகதிகளின் நிலைமைபற்றி அறிந்தபின் செனட்டர் கென்னடி பாகிஸ்தானுக்கும் போவார் என்று தெரிகின்றது

# கூட்டங்களுக்கு அனுமதிவேண்டும்

யாழ்ப்பாணம் புதன்.

அரசியல் கூட்டங்கள் எந்த இடத்தில் எந்த நேரத்தில் வைக்கவேண்டுமானாலும் அவை ஒலிபெருக்கி பாவிப்பதானாலும் பாவிக்கப்படவில்லையானாலும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் அனுமதி பெறப்படவேண்டும்.

இவ்வாறு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரசியல் கட்சிப் பொதுக் கூட்டங்கள் வைப்பதற்கு அனுமதியளிக்கப்படவில்லையானாலும் கடந்த சில தினங்களில் ஒலிபெருக்கி பாவிக்காமல் தனிக் கட்டடங்களில் கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்துவதற்குப் பொலிஸார் அனுமதியளித்து வந்தனர். இவற்றுக்கு ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதிவழங்கும் உரிமையும் அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தே விடப்பட்டிருக்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன் காரைநகரில் தமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பலர் ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.





உங்கள் உடம்பின் உள்
சுத்தத்திற்கு பாதுகாப்பான
உட்கொள்ள இலகுவான சுகபேதி
**வண்டலெக்ஸ்**

★ நவீன விஞ்ஞான சேர் முறைப் படி தயாரிக்கப்படுவது.
★ அதி நம்பிக்கையானது.
★ பாதுகாப்பானது.
★ வாய்க்கிதமானது. உட்கொள்ள இலகுவானது.
★ வழக்கமான உணவு உட்கொள்ளலாம்.
★ சிறுவருக்கும் வளர்ந்தவர்களுக்கும் உகந்தது.

உங்களுக்கும் உகந்த உன்னத சுகபேதி வண்டலெக்ஸ்.




GRANT 36 5283/71

ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.

## மணிவாக்கு

உழைப்பின் பெருந்தன்மையும் மனிதத் தன்மையும் உள்ளன. உண்மையான உள்ளத்துடன் உழைப்பவனுக்கு எந்நாளும் விமோசனம் உண்டு.
— கார்லைல்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண விரோதிகிருத வருஷம் ஆடி மாதம் 26 - ந் திகதி (11 - 8 - 71)

## இந்திய — சோவியத் ஒப்பந்தம்

இந்தியாவும் சோவியத்யூனியனும் "நட்புறவு, சமாதான ஒத்துழைப்பு உடன்படிக்கை" ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. உடன்படிக்கையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்தார் ஸ்வரண்சிங்கும் சோவியத் வெளிவிவகார அமைச்சர் அன்ட்ரூ குரோமிக்கோவும் கைச்சாத்திட்டுள்ளனர். புதுடில்லிக்கு திடீர் விஜயம் செய்த திரு. குரோமிக்கோ இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தியுடனும் வெளிவிவகார அமைச்சர் ஸ்வரண்சிங்குடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். பேச்சுவார்த்தைகளின் விபரங்களோ கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் முழு அம்சங்களும் அடங்கிய முழு விபரங்களோ உத்தியோக ரீதியாக இக் குறிப்புகள் எழுதப்படும் வரை வெளியாகவில்லை.

ஆனாலும் இந்திய—சோவியத் உடன்படிக்கையை இந்தியாவின் முதிர்ந்த அரசியல் ஞானியான ராஜாஜி உட்படப் பலரும் வரவேற்றிருக்கிறார்கள். இந்த உடன்படிக்கையினால் இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை பாதிக்கப்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்திருக்கிறார். இந்த உடன்படிக்கை இந்தியாவின் கொள்கையையே மாற்றிவிட்டதா, உலகின் அரசியல் போக்கையே திசைதிருப்பிவிடுமா? இது தான் இன்று எழுந்துள்ள கேள்வி.

இந்தியாவின் முடிசூடா மன்னரும் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம மந்திரியுமான பண்டித ஜவஹர்லால் நேரு எந்த வல்லரசுக் கூட்டணியிலும் சேராத நடுநிலைமைக் கொள்கையே இந்தியாவின் வெளிவிவகாரக்கொள்கை எனப் பிரகடனப்படுத்தியிருந்தார். இந்தக் கொள்கையை "பஞ்சசீல" அடிப்படையில் அவர் வகுத்துமிருந்தார். நடுநிலைமை என்பதன் அர்த்தம் இந்தியாவோ மற்றும் இக் கொள்கையைப் பின்பற்றும் எந்த நாடுமோ இதர நாடுகளுடன் அவற்றின் கொள்கைகளில் வேறுபட்டிருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை கண்டு நட்புறவுடன் வாழலாமென்பதே.

ஆனால் இந்தியா இதுவரை கடைப்பிடித்து வந்த நடுநிலைமைக் கொள்கை பெரும்பாலும் அதன் இலட்சியத்துக்கு மாறாகவே அமைந்துவிட்டது. பஞ்சசீலக் கொள்கையை சீனாவுடன் சேர்ந்து கூட்டாகப் பிரகடனப்படுத்தியது இந்தியா. என்றாலும் இந்தியாவும் சீனாவும் பின்னர் நேரடியாகவே மோதிக்கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. "சியாட்டோ", "செண்டோ" "நேட்டோ" "வார்சா ஒப்பந்தக்கூட்டு" என்றழைக்கப்படும் இராணுவக் கூட்டு ஒப்பந்தங்களில் இந்தியா சேராமலிருந்து நடுநிலைமையைக் கடைப்பிடித்து வந்தது. இதே சமயம் அமெரிக்காவின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றிருந்ததென் கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த கூட்டமைப்பிலும் இதர கூட்டமைப்பிலும் பாகிஸ்தான் சேர்ந்திருந்தது. இதன்பின்னர் அந்தக் கூட்டமைப்பிலிருந்தபடியே சீனாவுடனும் சோவியத் யூனியனுடனும் நட்புறவு கொண்டு ராணுவ உதவியையும் ஒத்துழைப்பையும்பெற்று வந்திருக்கிறது.

பண்டித நேருவின் காலத்திலேயே உலக அரசியலில் மாறுதல்கள் ஏற்படத் தொடங்கிவிட்டன. இன்று நிலைமை முற்றிலும் மாறுபட்டுவிட்டன. எதிரும் புதிருமாக இருந்த அமெரிக்காவும் சீனாவும் நட்புறவுகொள்ளும் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதேசமயம் கிழக்குப் பாகிஸ்தானும் மேற்குப் பாகிஸ்தானும் பிரிந்து போகக்கூடிய பெரும் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ராணுவக் கூட்டமைப்புக்களிலேயே சிக்கல்கள் தோன்றியிருக்கின்றன. கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு லட்சக்கணக்கில் வந்துள்ள அகதிகளுக்கு நிவாரண உதவி அளிக்கும் அதேசமயம் பாகிஸ்தானுக்கு ராணுவ உதவியையும் அமெரிக்கா அளித்துவருகிறது. சீனாவின் ஆதரவும் இந்தியாவுக்கில்லை. இந்நிலையில் இந்தியா என்னசெய்வது?

தனது பாதுகாப்புக்கு ஏதாவதொருவழி காண வேண்டுமென்பதில் அது அக்கறை கொள்ளாமலிருக்கமுடியாது. உலகில்வல்லரசு ஆதிக்கம் இருக்கும் வரை இந்தநிலை நீடிக்கத்தான் செய்யும் என்பதை எதிர்பார்க்கத்தான்வேண்டும்.

ஆனாலும் எல்லா நாடுகளுடனும் நட்புறவு கொண்டிருக்கவேண்டுமென்பதே நடுநிலைமைக் கொள்கையாதலால்சோவியத் யூனியனுடன் செய்துகொண்டுள்ள இந்த முதல் ஒப்பந்தம் சீனா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய இதர நாடுகளுடனும் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கு இந்தியா முன்னோடியாகக் கொள்ள வேண்டும்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டுஆகஸ்ட்மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாவை ஆலயவழக்கு

# ஹரிஜன நாயன்மார்கள் கோவிலுக்குள் சென்றுள்ளனர்

## நல்முருகேச முதலியார் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன் கிழக்கிழமை — கிரக்விட்டுள்ளக்கூடிய ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த நாயன்மார்கள் ஆலயத்திற்குள் சென்றிருக்கிறார்கள் என்று மாவை ஆலய வழக்கில் குறுக்குவிசாரணையின்போது மனுதாரரின் சாட்சியான நல்லமுருகேச முதலியார் கூறினார்.

இவ்வழக்கு நேற்று இரண்டாவது தினமாக யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது. நேற்று எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் சி. சுந்தரலிங்கம் குறுக்குவிசாரணை செய்தார்.

மாவை ஆலயத்திற்குள் செல்வோரை தடுக்கக்கூடாதென தரைச்சாமிக்குருக்களுக்கும், சி. சுந்தரலிங்கத்துக்கும் உத்தரவிடுமாறு கோரி அட்டோர்னி ஜெனரல் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் எல். டி. குருசாமி, புறக்டர் எஸ். கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிர் மனுதார் சார்பில் அட்வகேட் வி சுந்தரலிங்கம், அட்வகேட் ரி. சோமசேகரம், அட்வகேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசா ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் உலைநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

குறுக்குவிசாரணையின் போது இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நல்முருகேச முதலியார் கூறியதாவது: யாழ்ப்பாண நாயனார் திருஞானசம்பந்தருடன் எல்லாக் கோவில்களுக்கும் சென்றார். கண்ணப்பநாயனார் ஒரு வேடர் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் மாமிசம் புசிப்பவர்.

வழ: ஆறுமுகநாவலரின் பெரியபுராணத்தில் இவர் பற்றிக் கூறப்பட்டுள்ளது?- நான் திருமுறையிலிருந்து உதாரணங்கள் கூறினேன். பெரியபுராணம் திருமுறையல்ல.

வழ: கண்ணப்பர் சிவபெருமானுக்கு மாமிசம் கொடுத்தார்?- ஆம்.

வழ: தனது வாயினால் தண்ணீர் கொண்டுவந்து லிங்கத்தின்மீது ஊற்றினார்?- ஆம்

வழ: லிங்கம் இருந்தது ஒரு கோவிலல்ல?- ஆம்

வழ: பல்வேறு மண்டபங்கள் இல்லை?- ஆம்

வழ: திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சிவனுக்கு துணி துவைத்து உரிய நேரத்தில் கொடுத்தார்?- ஆம்.

வழ: அப்போது சிவபெருமான் தோன்றி முத்தியளித்தார்?- ஆம்

வழ: அந்த நாயனார் எந்தக் கோயிலுக்குள் சென்றார்?- எனக்குத் தெரியாது.

வழ: 63 நாயன்மார்களில் எத்தனைபேர் ஹரிஜன வகுப்பை சேர்ந்தவர்கள்?- 4 பேர்.

வழ: ஆறுமுகநாவலரை தெரியுமா?- அறிந்திருக்கிறேன். பெரியபுராணத்தை வசனநடையில் எழுதினார்.

நல்முருகேசமுதலியார் மேலும் கூறியதாவது: ஆகமத்தில் பூசைகள் பற்றியும் கோவில் அமைப்புகள் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. பல சைவஞானிகள் ஹரிஜன வகுப்பை சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். சான்றுகளில் கூறப்பட்டவர்களை மட்டும் தெரியும். மற்றவர்கள்பற்றி தெரியாது.

வழ: எந்தக்காலத்திலாவது ராஜாக்களோ அரசாங்கமோ ஹரிஜனர்கள் கோவிலுக்குள் செல்ல அனுமதித்தனரா?- சட்டமூலம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரின் அட்வகேட் எல் டி குருசாமி, சாட்சியமளித்த நல்முருகேச முதலியாரை மறுவிசாரணை செய்தார்.

எதிர்மனுதாரின் அட்வகேட் எல். டி. குருசாமி குறுக்குவிசாரணை செய்கையில் பாலசுந்தரக் குருக்கள் கூறியதாவது:-

வழ: வழக்கமாக கன்னூச் சிவகிறவர்கள் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்களாகும்.

வழ: பிராமணர் கன்சிலுக்கு அவர் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட்டாரா?- அவ் சிவகிறவர் ஒரு சாதியில் பிறந்தவராகும்

வழ: ஒருவர் பிராமணனாகப் பிறப்பது?- கர்மத்தினால்

வழ: பிறப்பில் பிராமணனைப் பிறந்து கன்சிலுக் கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவாரா?- அது கஷ்டமான காரியம்

வழ: நந்தனாரை தெரியுமா?- ஆம், அவர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்

எத்தனை நாயன்மார்கள்?- 63

வழ: எத்தனை பேர் ஹரிஜன வகுப்பினர்?- எட்டு அல்லது 10 பேர்

வழ: ஆகமத்தில் கூறப்பட்ட சில வழிபாடுகள், பூசைகள் சூழ்நிலை காரணமாக செய்யப்படுவதில்லை?- பெரும்பான்மையானவை செய்யப்படுகிறது.

வழ: ஆகமத்தில் கூறப்பட்டதுபோல வழிபாடு செய்பவர்கள் எல்லாக் கோவிலுக்கும் வருகிறார்களா?- எனக்குத் தெரியாது.

வழ: ஆகமத்தில் வழிபடுபவர்களின் உடைகளைப் பற்றி கூறப்பட்டிருக்கிறதா?-எனக்குத் தெரியாது.

வழ: சைவ ஆலயங்கள் எல்லாவற்றிலும் பஞ்சமுத்திரா கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது?- தெரியாது.

வழ: ஆகமத்தில் கோவில் எப்படி கட்டவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதா?- ஆம்.

வழ: இன்று கோவில் கட்டும்போது பழைய ஆகமத்தைக் கடைப்பிடித்துக் கட்ட முடியுமா?- ஆம்.

வழ: பூசைகளும் நடத்தலாம்?- ஆம்.

வழ: மாவிட்டபுரத்தைப் பிள்ளையார் கோவில் வழக்கில் சாட்சியமளித்தீர்?- ஆம்.

வழ: அங்கு எல்லாக் கட்டிடமும் இல்லை?- ஆம்.

வழ: வழிபடுவோர் சேட்டுடன் கோவிலுக்குச் செல்வார்கள்?- ஆம்.

வழ: பஞ்சமர் என்றால்?- சிறுபான்மை வகுப்பினரை குறிக்கும்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

### தமிழகத்தில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக நீங்கிவிடமுடியுமல்லவா?

0 0 0

இதுவரை தமிழகத்திலிருந்து நாகசுரக்கலைஞர் யாரும் வெளிநாடுசென்றுள்ளனரா? என்று கேட்டேன் காருகுறிச்சியாரை வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்ததாகவும் அவர் துரதிருஷ்டவசமாக காலமாகிவிட்டதாகவும் தமிழக முதல்வர் இக்குறையைத் தீர்த்து, சீக்கிரத்தில் நாகசுரக் கலைஞரை வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்க ஒழுங்குசெய்வதாய் மதுரையில் ஒரு விழாவில் தலைமை வகித்துப்பேசுகையில் அறிவித்துள்ளதாகவும் சேதுராமன் அவர்கள்சொன்னார்கள். இங்குவந்த அமெரிக்க ஐரோப்பிய கலைஞர்கள் தமது நாகசுரத்தில் அதிக சிரத்தைகாட்டினர். உலகில் தமிழருக்கே உரித்தானது இந்த நாதசுர வாத்தியம். இந்த கம்பீரமான. மங்களகரமான வாத்தியத்தை வெளிநாடுகளில் நமது கலைஞர்கள் சென்று வாசிப்பதாயின், அது உலகத்தலையாக மதிப்பும் பெறும். தமிழகத்திலிருந்து மட்டுமல்ல நம் ஈழத்திலிருந்தும் இக்கலைஞர்கள் உலகநாடுகளுக்குச் சென்று இக்கலையின் மதிப்பை உயர்த்தும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

0 0 0

கலைஞர்களின் பலர் குடிப்பழக்கத்தால் தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்வதுண்டு. அந்த ஆபத்திலிருந்து தம்மை தெய்வம் தான் காக்கின்றதென்று தெரிவிக்கிறார். இப்படிப்பட்ட அருங்கலைஞர். அவரிடம் ஒரு கெட்ட பழக்கமும் இல்லையாம். அவரது வாழ்க்கை கலைஞர்களுக்கெல்லாம் ஓர் உதாரணம். அவர் வாழ்க.

### ராணுவ—

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

நீத்து விட்டார். என்றாலும் ஆட்சியாளர்கள் ஷேக்கின் சார்பில் ஒரு வழக்கறிஞரை நிறுத்த முடிவுசெய்திருக்கிறார்களாம்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா நாகம்மா

காலஞ்சென்ற P. W. D. ஓவசியர் திரு செல்லையாவின் மனைவியும், உரப்புலம் ஆனைக்கோட்டை கைலாசபிள்ளையின் சகோதரியும் மார்க்கண்டன் தெட்சணாமூர்த்தி (P.W.D ஓவசியர் மருதங்கடவை) விஜயலட்சுமி வன்னியசிங்கம் (ராமகிருஷ் றூல் யாழ்ப்பாணம்), ஸ்ரீஸ்கந்தன் (கொழும்பு) ஜெகதீஸ்வரி ஆகியோரின் தாயாரும், வி. வேலாயுதபிள்ளை (மின் பொறியியலாளர் மின்னேரியா) கே. சிவானந்தன் (வழக்கறிஞர் கொழும்பு) ஆகியோரின் மாமியாருமான திருமதி செல்லையா நாகம்மா காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று காலை 9-00 மணியளவில் நல்லூர் - பருத்தித்துறை வீதி 284-ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காகச் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2956